செ.வெ.எண்:19 நாள்:10.01.2018

பத்திரிக்கை செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் 8வது தேசிய வாக்காளர் தினம் 25.01.2018 அன்று சிறப்பாக நடைத்திடும் பொருட்டு திருநெல்வேலி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் இன்று (10.01.2018) காலை 10.30 மணியளவில் முன்னோடி ஆயத்தப்பணி குறித்த கூட்டம் நடைபெற்றது. மேற்படி கூட்டத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

(1) சார் சார் ஆட்சியர், சேரன்மகாதேவி
(2) ஆணையாளர், திருநெல்வேலி மாநகராட்சி
(3) இணை இயக்குநர் (கல்லூரிக் கல்வி), திருநெல்வேலி
(4) திட்ட அலுவலர் ( மகளிர் திட்டம்), திருநெல்வேலி
(5) முதன்மை கல்வி அலுவலர், திருநெல்வேலி
(6) கோட்டாட்சித்தலைவர்கள், திருநெல்வேலி, தென்காசி
(7) மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்), திருநெல்வேலி
(8) மாவட்ட கல்வி அலுவலர், திருநெல்வேலி, சேரன்மகாதேவி
(9) ஆய்வாளர், மெட்ரிக் பள்ளிகள், திருநெல்வேலி
10) செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், திருநெல்வேலி
11) அனைத்து வட்டாட்சியர்கள்
12) தனி வட்டாட்சியர் (அரசு கேபிள்), திருநெல்வேலி

மேற்படி கூட்டத்தில் 25.01.2018 அன்று நடைபெறும் 8வவது தேசிய வாக்காளர் தினம் நடத்துதல் தொடர்பாக ஒவ்வொரு துறை அலுவலர்களும் செய்ய வேண்டிய முன்னேற்பாட்டு கீழ்க்கண்ட ஆயத்தப்பணிகள் குறித்து அறிவுரை வழங்கப்பட்டது.

(1) புதிய இளம் வாக்காளர்களுக்கு வாக்குச் சாவடி மையங்கள், வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலம் ஆகிய அலுவலகங்களில் நடைபெறும் விழாவின் போது வழங்குவதற்காக வண்ண வாக்காளர் புகைப்படை அடையாள அட்டை அச்சிட்டு தயார் நிலையில் வைக்கப்பட வேண்டும்.

(2) திருநெல்வேலி மகளிர் திட்டம் - மனித சங்கலி

(3) திருநெல்வேலி இணை இயக்குநர் (கல்லூரிக் கல்வி) - பேச்சு போட்டி/கட்டுரை போட்டு நடத்தப்பட வேண்டும்

(4) திருநெல்வேலி மாநகராட்சி மூலமாக வாக்காளர் விழிப்புணர்வு அடங்கிய பேனர்களுடன் பிரச்சார வேன்.

(5) திருநெல்வேலி முதன்மை கல்வி அலுவலர் / ஆய்வாளர் மெட்ரிக் பள்ளிகள் மூலமாக மாணவர்களை கொண்டு தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட வேண்டும்.

(6) அம்பாசமுத்திரம் மற்றும் கடையநல்லூர் வட்டாட்சியர்கள் - சுதந்திர போராட்ட தியாகிகள் / அவர்களது வாரிசுகளை தேசிய வாக்காளர் தினம் அன்று கௌரவப்படுத்துவதற்காக அழைத்து வரவேண்டும்.

(7) திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை வட்டாட்சியர்கள் - மாவட்ட ஆட்சியர் தலைமையில் 25.01.2018 அன்று நடைபெறும் 8வது தேசிய வாக்காளர் தினதன்று தலா 15 புதிய இளம் வாக்காளர்களை அழைத்து வரவேண்டும்.

(8) திருநெல்வேலி அரசு கேபிள் டிவி தனி வட்டாட்சியர் - வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான குறுத்தகட்டினை உள்ளுர் கேபிள் டிவியில் ஒளிப்பரப்பு செய்ய வேண்டும்.

(9) திருநெல்வேலி ஒருங்கிணைப்பாளர் நேரு யுவகேந்திரா - வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக தெரு முனைப்பிரச்சாரம், ஓரங்கநாடகம், கலை நிகழ்ச்சி நடத்தப்பட வேண்டும்.

10) அனைத்து வட்டாட்சியர்கள் - தேசிய வாக்காளர் தினத்தினை சிறப்பாக நடத்துவதற்காக ஏதுவாக மனித சங்கிலி, பேரணி, பள்ளிகளுக்கிடையே பேச்சி போட்டி, கட்டுரை போட்டி, வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பாக தெரு முனைப்பிரச்சாரம், ஓரங்கநாடகம், கலை நிகழ்ச்சிகள் ஆகியவை நடத்துதல், அனைத்து வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் புதிய இளம் வாக்காளர்களுக்கு வண்ண புகைப்பட அடையாள அட்டை வழங்குதற்கு முன்னேற்பாடு செய்யப்பட வேண்டும்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.